வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சப்சிடி என்பது உதவி என்பது, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை எய்துவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவது. 3, 4 ஆண்டுக்காலமாக அந்த திட்டம் செயல்பட்டதன் காரணமாக, காளைக் கன்றுக்கு 10 ரூபாயும், கிடாரிக் கன்றுக்கு 5 ரூபாயுமாக வழங்கப்பட்டு, அவை தரம் உயர்ந்த இனத்திலிருந்து பிறந்தவை என்ற சான்றிதழோடு வளர்க்கப்பட்டு மக்களிடையே பெருவாரியாக அறிமுகமான பிறகு அந்தத் திட்டத்தை நடத்துவது அந்த நோக்கத்திற்கே, குறிக்கோளுக்கே மாறுபட்டதாகும். நோக்கத்தை பாபுலரைஸ் செய்வது, எல்லோருக்கும் அறிமுகம் செய்வது, எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். திட்டத்தின் குறிக்கோள் ஓரளவு நிறைவேறிவிட்டதால் தொடர்ந்து நாம் அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிப்பது என்பது அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு ஏற்றதாக இல்லை.

Temporary Assistant Dental Surgeons

* 560 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon the Minister for Public Health be pleased to state—

(*a*) whether Assistant Dental Surgeons in Madras Medical Service are being kept temporary for the past six years; and

(*b*) if so. the steps taken to regularise them?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மருத்துவப் பணியில் உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்களை நிரந்தரமாக்கும் பொருட்டு, தமிழ்நாடு பொதுப் பணி தேர்வுக் கழகத்தை 42 உதவி பல் வைத்தியர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அரசுக் கேட்டுக்கொண்டுள்ளது. தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வுக் கழகமும் பல் வைத்தியத்தில், பட்டப்படிப்பு (பி.டி.எஸ்.) பெற்றுள்ள நபர்களிடமிருந்து உதவிப் பல் வைத்தியர்களாக நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணியில் தற்போது உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்கள் பொதுப்பணித் தேர்வுக் கழகத்திற்கு மனுச் செய்து அதன்மூலம் தங்கள் பணியை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி அவர்கள் மெட்ராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு மனுச் செய்ய வேண்டுமென்றால் எந்த ஆண்டுத் தேர்வு அளவிலே எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட தமிழ்நாடு பொதுப்பணி தேர்வுக் கழகம் விளம்பரம் செய்து கேட்கின்ற விண்ணப்பங்கள் தகுதியுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர்களிடையே இந்த ஆண்டு வரையில் தேர்வு பெற்றவர்கள் என்ற தடை அங்கே இல்லை. ஆனால் கூடுமானவரையில் அவர்கள் தகுதியைப் பார்த்து, நீண்ட அனுபவத்தைப்பார்த்து, ஏற்கனவே பார்த்த பணியின் அனுபவத்தைப் பார்த்து இயன்றவரையில் அங்கிருக்கிற பொதுவகையிலே தேர்ந்

1971 ஜூலை 30]

தெடுக்கப்படுகிறுர்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பங்கை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதுதான் வழக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இம்மாதிரியாகத் தேர்ந்தெடுக் கப்படக்கூடிய அசிஸ்டெண்ட் டெண்டல் சர்ஜன்ஸ் யாருக்கும் விதி விலக்குக் கொடுக்கப்படாமல், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்ற நிலையை உண்டாக்குவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி ஒரு கேள்விக்கே இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

DR. H. V. HANDE: Is it not a fact that the question of making them permanent or whatever it is, arises only after creating adequate number of vacancies or adequate opportunities? Have this Government any proposal to have Dental Wings in all Head-quarters Hospitals and if it is possible, also in all Taluk Head-quarters Hospital? What is the programme of the Government?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. இந்தத் துணைக் கேள்வியை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடத் தேவையில்லை. இருந் தாலும் சொல்லிக்கொள்கிறேன், ஏற்கனவே 5, 6 ஆண்டுகள் பணி யாற்றுபவர்கள், அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை என்பது எழுப்பப்பட்ட கேள்வி. இது வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியது. அதுவும் பின்னர் ஆலோசிக்கப் படும்.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் செலவான தொகை.

* 561 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு 1970-ம் ஆண்டில் எவ்வளவு ரூபாய் செலவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழகத்தில் 1969–70-ம் ஆண்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 2,48,69,721 மருத்துவ வசதிக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,16,38,809 புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பங்கு. மீதிச் செலவைத் தமிழக அரசு ஏற்கும். நமது மாநில அரசு 32,30,912 ரூபாய் 1969–70-ஆம் ஆண்டில் அதிகமாகச் செலவு செய்திருப்பதை ஏற்க வேண்டியிருக் கிறது.

திரு. க. துரைசாமி: தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் செலவாகும் தொகையை இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படியிருந்தும் நமக்குப் போதிய பணம் தராமல் தமிழக அரசு செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட் டிருக்கிறது. அப்படிச் செலவான பணத்தை இ.எஸ்.ஐ. கார்ப்ப ரேஷனை வற்புறுத்திப்பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?